# 7

# கவலையாக இருந்த விஷயத்தைத் தேவன் எவ்வாறு குணமாக்கினார்

## (1 இராஜாக்கள் 19:1–21)

*எலியா மழைக்காக செய்த ஜெபத்திற்குப் பதில் அளிக்கப்பட்டவுடன் அவர் மனவெழுச்சி கொண்டவராக இருந்தார்! பாகாலின் தீர்க்கதரிசிகளை எதிர்கொள்ளுதலில் அவரது தேவன் வெற்றி உள்ளவராக இருந்தார். மக்கள், "யெகோவாவே தேவன்!" என்று சப்தமிட்டதை அவர் கேட்டிருந்தார். கடைசியாக அவர், பஞ்சத்தை முடித்துவைக்கும் ஊழிப்பெருவெள்ளத்தைக் கண்டிருந்தார். 18ம் அதிகாரத்தின் முடிவில், ஆகாப் அரண்மனைக்குள் சென்றபோது, எலியா யெஸ்ரயேலின் ஒலிமுகவாசலில் காத்துக்கொண்டிருந்தார். நடந்த எல்லாவற்றின் பின்விளைவுகளும் அரசின் மேல்மட்டங்களில் விளைவை ஏற்படுத்தியதால் நாடு முழுவதும் கர்த்தரிடமாய்த் திரும்பும் என்று அவர் நம்பினார் என்பதில் சந்தேகம் இல்லை. அந்தத் தீர்க்கதரிசியானவர் மன எழுச்சியினால் நடுங்கிக்கொண்டிருந்ததை என்னால் காண முடிகிறது.*

*கர்மேல் மலையில் இருந்து துயரத்தின் பள்ளத்தாக்கிற்கு எலியா செல்லுகிற வேளையில் 19ம் அதிகாரத்தில் என்ன ஒரு மாறுபாடு ஏற்படுகிறது! யாக்கோபு, "எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும்" என்று குறிப்பிடுகிறார் (யாக்கோபு 5:17). ஒருவேளை யாக்கோபு, 1 இராஜாக்கள் 19ம் அதிகாரத்தைப் பற்றி நினைத்திருக்கலாம். இந்த அதிகாரத்தைக் கர்த்தர் வேதாகமத்தில் வைத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தர் சித்திரத்தை வரையும் போது பாலுண்ணி போன்ற மற்ற எல்லாவற்றுடனேயே வரைகிறார் என்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நம்மைப் போலவே எலியா சில பிரச்சனைகளுடன் போராடிக்கொண்டு இருந்தார் என்பதை நாம் அறிவது நமக்கு உதவக்கூடும்.*

*எலியாவின் பிரச்சனையை நாம் ஆராய்ந்து பார்த்து, எவ்வாறு அவர் அதைப் பெற்றார் என்றும் மற்றும் அந்தப் பிரச்சனையைக் கவனிக்கத் தேவன் என்ன செய்தார் என்றும் நாம் காண்போமாக (1 இராஜாக்கள் 19).*

### கவலைக்குரிய ஒரு விஷயம் (19:1-4)

"எலியா செய்த எல்லாவற்றையும், அவன் தீர்க்கதரிசிகளெல்லாரையும் பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும் ஆகாப் யேசபேலுக்கு அறிவித்தான்" (வசனம் 1). பின்வரும் காட்சியைச் சித்தரித்துக் கொள்ளுங்கள்:

அது இரவில் வெகுநேரமாகி இருந்தது. ஆகாப் படுக்கை அறைக்குள் இரகசியமாய்ப் பதுங்கிச் செல்கிறார். தாம் யேசபேலை எழுப்பிவிடாதிருக்கும் நம்பிக்கையில் அவர் இவ்வாறு செய்கிறார். அவர் தமது இரண்டாவது காலணியைக் கழற்றிவைக்கப் போகும்போது, அவள் தூக்கத்தில் இருந்து கலைந்து "ஆகாப்?" என்று தூக்கக் கலக்கத்திலேயே கேட்கிறாள்.

"அன்பே, உன்னை எழுப்பக்கூடாது என்று நான் முயற்சி செய்தேன்."

"நீங்கள் மிகவும் தாமதமாக வந்திருக்கிறீர்கள்."

"ஆம், இது ஒரு பணிமும்முரமான நாளாக இருந்தது."

"ஆகாப், உங்கள் குரலில் நான் எதையோ கேட்க முடிகிறது. ஏதோ ஒன்று நடந்துள்ளது."

"அதைப்பற்றி நான் காலையில் உன்னிடத்தில் கூறுவேன்."

"அதைப்பற்றி *இப்போதே* எனக்குக் கூறுங்கள்." (உங்களில் கணவர்களாக உள்ளவர்கள், உங்கள் மனைவியிடத்தில் இருந்து சிலவற்றை மறைக்க முயற்சி செய்துள்ள எவரும், இந்தக் காட்சியை நன்கு அறிகிறீர்கள்.)

என்ன நடந்தது என்று அவளுக்கு ஆகாப் கூறத்தொடங்குகிறார்: "இது ... ம் ... ஒரு மன எழுச்சிகொண்ட நாளாக இருந்தது. எலியா வானத்தில் இருந்து அக்கினியை வரவழைத்தார்."

யேசபேல் கொட்டாவி விடுகிறாள். "அந்த பழைய தந்திரம். எனது தீர்க்கதரிசிகள் எல்லாருக்கும் அந்தத் தந்திர வித்தையைச் செய்வது எவ்வாறு என்று நான் கற்பித்திருக்கிறேன்."

"பின்பு அவர் மழை பெய்யப்போகிறது என்று சொன்னார். அவர் அதைக் கூறியபோது அது பெய்யும் என்பதாகக் காணப்படவில்லை, ஆனால் ஒரு கணத்தில் அது பொழியத் தொடங்கிற்று."

"மழை? அது நல்லது. நீங்கள் ஏன் முழுவதும் நனைந்திருக்கிறீர்கள் என்று நான் ஆச்சரியப்படுகிறேன்.இருப்பினும் அவர் [எலியா] அதைக் கூறியது தற்செயலானது என்று நான் நிச்சயமாயிருக்கிறேன். இன்னும் நீங்கள் சிலவற்றை எனக்குக் கூறாதிருக்கிறீர்கள்."

ஆகாப் இரண்டு மூன்று முறைகள் எச்சிலை விழுங்குகிறார், ஆழமாகப் பெருமூச்சு விடுகிறார், மற்றும் அவர், "அதற்குப் பின்பு, தீர்க்கதரிசிகள் எல்லாரையும் பிடித்துச் சென்ற எலியா அவர்களை ஆற்றின் அருகில் அழைத்துச் சென்று ... (முணு முணுக்கிறார்)."

"*என்ன?*"

"தீர்க்கதரிசிகள் எல்லாரையும் பிடித்துச் சென்ற எலியா அவர்களை ஆற்றின் அருகில் அழைத்துச் சென்று ... (முணு முணுக்கிறார்)."

"என்ன?"

"அவர்கள் எல்லாரையும் *கொன்றுபோட்டார்.*"

அந்த இடத்தில் யேசபேல், அடுத்த பதினைந்து முதல் முப்பது நிமிடங்கள் வரையில் கோபத்தில் கொண்டிருந்திருக்கக் கூடிய ஆர்ப்பாட்டத்தை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. அவள் சந்தோஷம் இல்லாத பெண்ணாக இருந்தாள்.

என்னவெல்லாம் நடக்கும் என்று எலியா நம்பிக்கையாக இருந்தாரோ, அவை நடக்கவில்லை, நடக்க முடியவில்லை, ஏனெனில் ஆகாப் யேசபேலைத் திருமணம் செய்திருந்தார்.

“அப்போழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி[னாள்] (வசனம் 2அ). எலியா, “இராஜ அரண்மனைக்கு வாருங்கள், ஒரு ஆலோசகராக இருங்கள்; நாங்கள் கர்த்தரிடத்தில் திரும்புவதற்கு உதவுங்கள்” என்று கூறும் ஒரு செய்தியாளரை எதிர்பார்த்து இருந்திருக்கலாம். இருப்பினும் செய்தி அப்படிப்பட்டதாக இருக்கவில்லை.

> அப்பொழுது யேசபேல் எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களின் [பாகாலின் தீர்க்கதரிசிகளாக இருந்து மரித்துபோனவர்களின்] ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச் செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில் உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால் தேவர்கள் [அவளுடைய தேவர்கள்] அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று சொல்லச் சொன்னாள் (வசனம் 2).

வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், யேசபேலின் செய்தியானது எலியா வினிடத்தில், “இருபத்து நான்கு மணி நேரத்திற்குள், ஒன்று நான் இறக்கப் போகிறேன் அல்லது நீ இறக்கப் போகிறாய்” என்று கூறியது!

யேசபேல் ஒரு செய்தியாளரை அனுப்பியது ஏன் என்று சிலர் வியப்படைகின்றனர். அவள் உண்மையிலேயே தீவிரமானவளாக இருந்தால், அவள் ஏன் ஒரு கொலைகாரனை அனுப்பவில்லை? அது வெறும் பொய், பயமுறுத்தும் ஒரு தந்திரம் ஆனால் அது தன்வேலையைச் செய்தது என்று அவர்கள் முடிவு செய்கின்றனர். அவள் மிகவும் தீவிரமாக இருந்தாள் என்பதே எனது கருத்தாக உள்ளது (ஏனெனில் அதுவே தகுதியானதாக இருக்கிறது). எலியா, அரசரையும் தீர்க்கதரிசிகளையும் இஸ்ரவேல் குடும்பங்களின் தலைவர்களையும் தலைகுனிந்து நோக்கியது பற்றி அவள் மனம்மகிழ்ச்சி அடைந்தாள் என்று நான் நான் நினைக்கவில்லை. “அவர்கள் மனிதர்களின் ஒரு கூட்டமாக மாத்திரமே இருந்தனர். அவன் இன்னும் *என்னை* முகமுகமாகச் சந்திக்கவில்லை.” யேசபேல் எலியாவிடம் கர்மேல் மலையில் ஒரு காட்சியாக அல்ல, ஆனால் யெஸ்ரெயேலில் ஒரு காட்சியாக - நகரத்தின் தூசுபடிந்த தெருக்களில், ஒற்றைக்கு ஒற்றையாக, நேருக்கு நேராக எதிர்கொள்ளுதலில் தன்னைச் சந்திக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்தாள் என்று நான் நினைக்கிறேன்.

எலியா எவ்வாறு மறுசெயல் செய்தார்? “அவனுக்கு அது தெரிந்தபோது [அவன் அஞ்சி][1] எழுந்து, தன் பிராணனைக் காக்க ஓடிப்போனான்” (வசனம் 3அ). இங்கு, ஆயிரக்கணக்கானவர்கள் முன்பாக, ஆயுதங்களுடன் இருந்த பலர் முன்பாக கர்மேல் மலையில் ஒற்றை ஆளாக நின்றிருந்த ஒரு மனிதர், இப்போது இந்த ஒழுக்கங்குலைந்த அரசியிடம் இருந்து தப்புவதற்காக ஓடினார்.

அவர், “தன் பிராணனைக் காக்க யூதாவைச் சேர்ந்த பெயர்செபாவுக்குப் புறப்பட்டுப்போ[னார்]” (வசனம் 3ஆ). பெயர்செபா என்ற இடம் யூதாவின் தெற்கு முனையில் - யெஸ்ரெயேலில் இருந்து சுமார் நூறு மைல்கள் தொலைவில் இருந்தது. சிறிது தூக்கம் அல்லது தூக்கமே இல்லாத, மற்றும் உண்பதற்கு ஒன்றுமே கொண்டிராத எலியா, அந்த நூறு மைல்கள் தூரத்தையும் ஓடியே கடந்தார்.

அவர் பெயர்செபாவைச் சென்று சேர்ந்தபோது, அவர் “தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான்” (வசனம் 3இ). இந்த வேலைக்காரன் நமக்கு 2ம் அதி

காரத்தில் சுருக்கமாக அறிமுகப்படுத்தப்பட்டான்.[2] எலியா இதற்குக் காரணம் எதைக் கொண்டிருந்தாலும், அவர் அவனை அங்கே பின்விட்டுச் சென்றார்.[3]

எலியா, சீனாய் வனாந்தர எல்லையில் இருந்த பெயர்செபாவில் நிற்கவில்லை; அவர் தொடர்ந்து ஓடினார். "அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம்போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து" (வசனம் 4அ). சில மொழிபெயர்ப்புகளில் "ஒரு துடைப்பச் செடியின்கீழ்" என்றுள்ளது. இது சில வேளைகளில் பத்து அல்லது பன்னிரெண்டு அடிகள் உயரம் வளரக்கூடிய ஒல்லியும் கரடுமுரடுமான புதர்ச்செடியாக இருந்தது. அதில் நிழல் இல்லை, ஆனால் ஒன்றும் இல்லாததற்கு அது சிறந்ததாக இருந்தது.

"தான் சாகவேண்டும் என்று கோரி"[4] (வசனம் 4ஆ). இது முரண்பாடானதாக இருப்பதில்லையா? அவர் யேசபேலினால் தாம் கொல்லப்படாதபடிக்குத் தமது உயிருக்காகப் பயந்து ஓடினார், இருப்பினும் அவர், "தான் சாகவேண்டும் என்று கோரினார்." தொடர்ந்து, அவர், "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப் [எனது முன்னோர்கள், எனக்கு முன் தேவனுக்காகப் பேசுபவர்களாக வந்தவர்களைப்] பார்க்கிலும் நல்லவன் அல்ல" என்று கூறினார் (வசனம் 4இ).[5] அவர், "தமது பிதாக்களைக் காட்டிலும் தாம் நல்லவர்" என்று நினைத்தார் என்பது உறுதி. அவர்கள் செய்திராதி ருந்ததை அவரால் செய்யமுடிந்தது என்று அவர் நினைத்தார்: அது இஸ்ரவேல் மக்களை உண்மைத் தேவனிடமாகத் திருப்புதல். அது நடந்திருக்கவில்லை, எனவே அவர், "நான், தீர்க்கதரிசியின் அடையாள அட்டையைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். நான் மரிக்கத் தயாராக இருக்கிறேன்" என்று கூறினார்.

இங்கு நாம், ஊக்கமிழந்துபோகுதல் பற்றிய தலைசிறந்த விஷயம் ஒன்றைக் கொண்டுள்ளோம்: கீழாக உள்ளதாக நினைக்கிற ஒரு மனிதர், தமது சூழ்நிலை நம்பிக்கையற்றதாக உள்ளது என்று நினைக்கிற ஒரு மனிதர், சூழ்நிலைகளினால் வலைபின்னப்பட்டுள்ளதாக உணருகிற ஒரு மனிதர் இருக்கி றார். நாம் யாவரும் நமது வாழ்வில் ஒரு முறையாவது இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

எலியா சூரைச் செடியின்கீழாக எவ்வாறு வந்து சேர்ந்தார்?

முதலாவது அவர், மனித முகாந்தரத்தினால் வழிநடத்தப்பட்டிருந்தார், தெய்வீக வெளிப்படுத்துதலினால் அல்ல. அவர் கர்த்தருடனான தமது உறவுமுறையின் தடத்திலிருந்து விலகினார். இதுவரையிலும் அவர், தாம் அடுத்த அடிவைப்பை எடுத்துவைக்கும் முன்பு, "கர்த்தருடைய வார்த்தை" வரும்வரையில் காத்திருந்தார், ஆனால் இம்முறை அவர் அவ்வாறு இருக்க வில்லை. அவர் தேவனுடைய சித்தத்திற்குப் பதிலாகத் தமது சுய முடிவில் சார்ந்திருக்கத் தொடங்கினார்.

அவர் "கர்த்தருடைய வார்த்தைக்காகக் காத்திருந்தால்" என்ன நடந்து இருக்கும்? அவர், "தேவனே, யேசபேல் எனது வாழ்வைப் பறிக்க ஒப்பந்தம் செய்திருக்கிறாள், மற்றும் நான் மிகவும் அஞ்சுகிறேன்" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

"நீ விளையாட்டுக்குச் சொல்கிறாய்! நீ அரசரையும் அவரது படைகளையும், பாகாலின் 450 தீர்க்கதரிசிகளையும், பாய்ந்துவந்த ஈட்டிகள் கத்திகளையும் இஸ்ரவேலின் ஆயிரக்கணக்கானவர்களையும் தோல்வியடையச் செய்தபின்பு இந்தப் பிரம்மைபிடித்த விக்கிரகாராதனைக்காரிக்குப் பயப்படுகிறாயா? அவள்

உனக்குச் செய்யக்கூடிய மோசமான விஷயம் என்ன?"

"அவள் என்னைக் கொன்றுபோட முயற்சி செய்கிறாள்."

"அவள் அதைச் செய்தால் என்ன? 'சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்.'[6] அவள் உன்னைக் கொன்றுபோட்டால், நீ என்னுடன் இருக்கும்படி இல்லத்திற்கு வருவாய்."

"நான் என்ன செய்ய வேண்டும்?"

"நீ இருக்கும் இடத்திலேயே தங்கியிரு. நாம் முயற்சிசெய்யக்கூடிய இன்னும் ஒரு சில விஷயங்களை நான் கொண்டிருக்கிறேன்!"

இருப்பினும், எலியா "கர்த்தருடைய வார்த்தைக்காக" காத்திருக்கவில்லை. நாம் மனிதக் கண்களுடன் வாழ்க்கையைக் கண்ணோக்கும்போது, ஒரு தொலைநோக்கியில் தவறான பக்கத்தின் மூலமாகப் பார்ப்பவர்களாக இருக்கிறோம். நமது கருத்துநோக்கு குழப்பமடைகிறது.

இரண்டாவதாக, இதன்விளைவாக எலியா தெளிவாகச் சிந்திக்க இயலாது போயிற்று; அவரது சிந்திக்கும் செயல்முறைகள் குழப்பம் அடைந்தன. அவர் தெளிவாகச் சிந்தித்திருந்தால், தேவனுடைய உதவியுடன் கர்மேல் மலையில் ஆயிரக்கணக்கானவர்களைத் தோல்வியடையச் செய்த தாம், நிச்சயமாக ஒரு பெண்ணைப் பார்த்துப் பயப்படத் தேவையில்லை என்று பகுத்து அறிந்திருப்பார். அதற்குப் பதிலாக, எதிர்மறைச் சிந்தனைகள் அவரது மனதில் நிரம்பின; அவை அவரது தலையைச் சுற்றிச் சுழல ஆரம்பித்தன.

மூன்றாவதாக, அவர் பயத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்திருந்தார். நாம் பயத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, அது வளர்ந்து பெருகுகிறது. நான் ஒரு சிறுபிள்ளையாக இருந்தபோது, எனக்குப் பின்னால் ஏதோ சப்தம் கேட்டதாகக் கற்பனை செய்துகொண்டு இருளில் நான் நடந்த விஷயம் எனக்கு நினைவில் வருகிறது. அதை நான் புறக்கணிக்க முயற்சி செய்து ஒரு சிறிய மெட்டை வாயில் விசில் அடித்துச் சென்றேன். நான் வேகமாக நடக்கத் தொடங்கினேன், பின்பு இன்னும் அதிக வேகமாகச் சென்றேன். நான் குதித்து ஓடத் தொடங்கி, எனது சிறு பாதங்கள் என்னைத் தூக்கிச் செல்லும் அளவுக்கு விரைவாகச் செல்லத் தொடங்கினேன். நான் வீடு சென்று சேர்ந்தபோது, எனது இருதயம் தடதடவென்று அடித்துக்கொண்டது.[7] எலியா பயத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுத்தபோது, அவர் நூறு அல்லது அதற்குச் சற்றேறக் குறையலான மைல்கள் தூரம் ஓடுவதிலிருந்து நின்றுவிடவில்லை!

நான்காவதாக அவர், வெற்றிக்குப் பின்பு வரக்கூடியதாயிருந்த இந்தச் சிறுமைக்குத் தயாராக இருக்கவில்லை. அந்தச் சிறுமைப்படுதல் பற்றி ஒவ்வொரு பயிற்சியாளரும் அறிந்திருக்கிறார். வெற்றிக் கோப்பையைத் தட்டிச்சென்ற வீரர்கள் அடுத்த ஆண்டிலும் வெற்றியாளர்களாக மீண்டும் வருவதில் கடினமான வேளையைக் கொண்டிருக்க அது ஒரு காரணமாக உள்ளது.வெற்றி நம்மை தாக்குதலுக்கு ஆளாகக் கூடியவர்களாக்குகிறது. கர்த்தருடைய சபையின் சபைக்குழுமங்கள்கூட, ஆராதனைக்கு வருகையை அதிகரித்தல் அல்லது மற்ற சிறப்பான நிகழ்ச்சிகளுக்குப் பின்பு சிறுமை ஒன்றைக் கொண்டிருக்கக் கூடும். எலியா அந்த சிறுமைக்குத் தயாராக இருக்கவில்லை.

ஐந்தாவதாக, அவர் தமது பலத்தின் ஆதாரமூலத்தில் இருந்து தம்மைத் துண்டித்துக்கொண்டார். அவர் தேவனிடத்தில் இருந்து தம்மைத் துண்டித்துகொண்டார்; அவர் தேவனுடைய வார்த்தைக்காகக் காத்திருக்க

வில்லை. அவர் மனிதர்களிடத்தில் இருந்து தம்மைத் துண்டித்துக்கொண்டார்; என்ன காரணத்தினாலோ அவர், தமது வேலைக்காரனிடத்தில் பிரிவு சொல்லிக் கொண்டிருந்தார். எலியா "உயிரோடிருந்தவர்களிலேயே மிகவும் தனிமையான மனிதர்" என்று அழைக்கப்பட்டிருந்தார்.

மனம்முறிந்துபோன மக்கள் பெரும்பாலும் தனிமையில் இருக்கின்றனர். அவர்கள் தனிமையான இருந்தபோதிலும், எவ்வித மாறுபாடுமின்றி அவர்கள் மற்றவர்களிடத்தில் இருந்து தங்களைத் துண்டித்துக் கொள்கின்றனர். "யாரையும் இனிக் காண்பதற்கு நான் விரும்பவில்லை. என்னைச் சுற்றிலும் மக்கள் இருப்பதை நான் விரும்பவில்லை." அது காரணத்தினால் காரியத்தை ஏற்படுத்தி அந்தக் காரியத்தினால் திரும்பவும் அதே காரணத்தை ஏற்படுத்தும் ஒரு வட்டாரமாக உள்ளது.

பிறருக்கு நாம் தேவைப்படலாம் என்பதற்காகவே தேவன் நம்மைப் படைத்தார். "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ..." (ஆதியாகமம் 2:18). கெத்செமெனே தோட்டத்தில் இயேசுகூட, தமது சீஷர்கள் தம்முடன் "விழித் திருக்க வேண்டும்" என்று விரும்பினார் (மத்தேயு 26:40).

எலியா தமக்கு ஆதரவு அளிக்கும் முறைமையில் இருந்து தம்மைத் துண்டித்துக்கொண்டார்.

ஆறாவதாக அவர், மிகவும் அதிகமாய்க் களைப்படையத் தம்மை அனுமதித்தார். அவர் பல நாட்களாக எதுவும் உண்டிருக்கவில்லை என்பது உறுதி. அவர் பல மைல்கள் தூரம் ஓடியிருந்தார். அவர் உடல்ரீதியாக உணர்வுரீதி யாக மற்றும் ஆவிக்குரிய வகையில் சக்தி தீர்ந்தவராக இருந்தார். கிரேக்கர்கள் பின்வரும் கூற்று ஒன்றைக் கொண்டுள்ளனர்: "ஒரு வில் வளைக்கப்பட்ட நிலையில் இருந்தால், அது முறிந்துபோகும்." எலியா முறிந்துபோனார்.

இன்றைய நாட்களில் இது ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. நாம் அன்றாடம் இருபத்து ஐந்து மணிநேரமும், ஒவ்வொரு மாதமும் முப்பத்து இரண்டு நாட்களுக்கு நமது நடவடிக்கைகளை அட்டவணைப்படுத்தச் சாய்கிறோம். நம்மை நாம், வாழ்வின் பெருஞ்சாலையில் அதிகவேக மான தடத்தில், வெளியேற வழியெதுவும் இன்றி, வேகமாக வேகமாகச் செல்பவர்களாகக் காண்கிறோம். நாம் எச்சரிக்கையாக இராவிட்டால், நாம் முற்றிலும் சக்திதீர்ந்து போனவர்களாகக் முடியக்கூடும், நமது மனங்கள் உணர்வுப்பூர்வமாக சுற்றிச்சுழன்று செயலாற்றிக்கொண்டு, பிரச்சனைகளின் தீவிர விஷயமாக இருக்கக்கூடும். இதுதொடர்பான ஒரு சிறு அறிவுரை பின்வரு மாறு: நீங்கள் மிகவும் களைப்பாக இருக்கும்போது, முக்கியமான முடிவு எதையும் ஏற்படுத்தாதீர்கள். எலியா, தாம் யேசபேலை முகமுகமாய்க் காண முடியுமா இல்லையா என்பது பற்றி ஞானமிக்க முடிவை ஏற்படுத்தக்கூடாத அளவுக்கு மிகவும் களைப்பாக இருந்தார்!

ஏழாவதாக, அவர் சுயபச்சாதாபத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுத்தி ருந்தார். அவர், "நான் மிகவும் கடினமாக முயற்சி செய்திருந்தேன், ஆனால் ஏதொன்றையும் நிறைவேற்றியிருக்கவில்லை. நான் நல்லவன் அல்ல!" என்று அவர் கூறினார். அந்த எண்ணப்போக்கு தாழ்மையைப் பிரதிபலிப்பதாகச் சிலர் நினைக்கின்றனர், ஆனால் அது அவ்வாறு செய்வதில்லை. அது நேரெதிரானதைச் சுட்டிக் காண்பிக்கிறது. அது தன்னைப்பற்றி அதிகமாக நினைக்கிற சுயநலத்தின் நுட்பமான வடிவமாக உள்ளது.

சுயபச்சாதாபம் என்பது ஒரு அரக்கனாக உள்ளது. அது நமது காதுகளில் பொய்களைக் கிசுகிசுக்கிறது, பின்பு ஒவ்வொரு விஷயமும் அது இருப்பதைக் காட்டிலும் மிகமோசமானதாகக் காணப்படும்படி மிகைப்படுத்தத் தொடங்குகிறது. சுயபச்சாதாபம் என்பது தனிநபரைத் தற்கொலை செய்துகொள்ளும்படி ஆலோசிக்கச் செய்யவும் கூடும். எலியா, "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்" என்று கூறினார்.

எலியா எங்கிருக்கிறார் என்று நீங்கள் காண்கிறீர்களா? தேவனுடையவராக இருந்த இந்த மாபெரும் மனிதருக்குள் ஊக்கம் இழந்த தன்மையும் மனச்சோர்வும் வந்தன. இது எவரொருவருக்கும் நடக்கக்கூடும். மோசே, தாம் மரித்துப் போக வேண்டும் என்று விரும்பினார் (எண்ணாகமம் 11:15), அது போலவே யோபுவும் (யோபு 3:1ff.) மற்றும் யோனா (யோனா 4:3) ஆகியோரும் விரும்பினர். பவுல் கூட தமது வாழ்வில் சோர்வடைந்தார் (2 கொரிந்தியர் 1:8). இது உங்களுக்கும் நடக்கக்கூடும்.

## பிரச்சனையின் இந்த விஷயத்தைக் குணமாக்கத் தேவன் என்ன செய்தார்? (19:5-21)

இவ்வரலாற்றின் எஞ்சிய பகுதியை நாம் ஆய்வு செய்வோமாக. பின்பு நாம், பிரச்சனையின் இந்த விஷயத்தைக் குணமாக்கத் தேவன் என்ன செய்தார் என்பதைத் தொகுத்துரைப்போம். ஒருவேளை நாம் நமக்கு - மற்றும் பிறருக்கு உதவுவது எவ்வாறு என்று கற்றுக்கொள்ளக்கூடும்.

> ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு என்றான். அவன் விழித்துப் பார்க்கிறபோது, இதோ, தழலில்[8] சுடப்பட்ட அடையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் அவன் தலைமாட்டில் இருந்தது; அப்பொழுது அவன், புசித்துக் குடித்துத் திரும்பப் படுத்துக்கொண்டான் (வசனங்கள் 5, 6).

முன்பு தேவன், எலியாவுக்கு உணவு சேவை செய்வதற்குக் காகங்களையும் ஒரு விதவையையும் பயன்படுத்தினார்; இப்போது அவர் ஒரு தூதனைப் பயன்படுத்தினார்.

> கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான். அப்பொழுது அவன் எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பதுநாள் இரவுபகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான் (வசனங்கள் 7, 8).

"ஓரேப்" என்பது சீனாய் மலைக்கு இன்னொரு பெயராக இருந்தது, அந்த மலையின்மீதுதான் மோசே நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார்.[9] (நாற்பது நாட்களுக்குத் திரும்பச் சமைக்கத் தேவையில்லாதபடிக்கு, அந்த உணவு தயாரிக்கும் முறையை நாம் பெற்றுக்கொண்டிருக்க விரும்புவோம்!)

*"அங்கே அவன் [எலியா] ஒரு கெபிக்குள்[10] போய்த் தங்கினான்" (வசனம் 9அ).* தீர்க்கதரிசி குகைவாசியானார். அவர் உலகத்தில் இருந்து தம்மைத் துண்டித்துக் கொண்டார்.

*"இதோ, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி" (வசனம் 9ஆ).* இப்போது "கர்த்தருடைய வார்த்தை" வந்தது. "அவர்: எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்றார்" (வசனம் 9இ). தேவன் இதை எவ்வாறு கூறினார் என்று நாம் அறிந்தால், இது ஒரு கண்டனமா இல்லையா என்பதை நாம் அறிவோம். இது ஒரு கண்டனமாக இருந்தால், இது ஒரு மென்மையான கண்டனமாக உள்ளது: "நீ இஸ்ரவேலில் எனது ஊழியத்தைச் செய்துகொண்டிருக்க வேண்டிய இவ்வேளையில் இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறாய்?"

எலியா தமது மனதில் கட்டியெழுப்பியிருந்த எல்லா விஷயங்களையும் எண்ணிப்பார்க்கத் தொடங்கினார்:

> *அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான்[11] (வசனம் 10).*

எலியா, "இது நம்பிக்கையற்ற விஷயமாக உள்ளது, கர்த்தாவே! எதுவும் செய்ய இயலாது" என்று கூறினார்.

பின்பு தேவன் பேசினார்: *"நீ வெளியே வந்து" (வசனம் 11அ).* அவர் எலியாவிடத்தில், குகையை விட்டு வெளியே வரும்படி கூறினார். *"கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தில் நில்" (வசனம் 11ஆ).* தேவன், "கடந்த காலத்தில், நீ எனக்கு முன்பாக நின்று எனது கட்டளைகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பவன் என்று அறியப்பட்டிருந்தாய். அந்த உறவுமுறையை மீளக்கட்டுவிப்பது நமக்கு அவசியமாக உள்ளது!" என்று கூறினார்.

> *அப்பொழுது இதோ, கர்த்தர் கடந்துபோனார்; கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று; ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குப்பின் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று: ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குபின் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று; பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி [ஒருவேளை இது மின்னலாக இருந்திருக்கலாம்] உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை; அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று (வசனங்கள் 11இ, 12).*

KJV வேதாகமத்தில், "ஒரு மிகச்சிறிய குரல்" என்றுள்ளது. இருப்பினும் இது அனேகமாக, "எலியா, எலியா" என்று முணுமுணுத்தலாக இருந்திராது. மூல எபிரெய மொழி வேதாகமத்தில், "மென்மையான நிசப்தத்தின் குரல் அல்லது இரைச்சல் அல்லது சப்தம்" என்றுள்ளது. NASB வேதாகமம் கருத்துத்

தெரிவித்துள்ளபடி, இது ஒரு மென்மையான வசந்தக் காற்று வீசுதலாக இருந்திருக்கும். இது ஒரு சிறிய மிருகத்தின் மெல்லிய சப்தமாகக் கூட இருந்திருக்க முடியும்.

தேவன் இவை யாவற்றையும் செய்தது ஏன் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஒருவேளை எலியா, நியாயப்பிரமானம் வந்தபோது மோசே கண்டிருந்த செயல்விளக்கத்தின் வகையை விரும்பிய காரணத்தினால் இவ்விடத்திற்கு வந்திருக்கலாம்; ஒருவேளை எலியா, தேவன் வல்லமையின் தேவனாக இருந்தார் என்பதற்கு இன்னும் உறுதிப்பாட்டை விரும்பியிருக்கலாம். இதற்கு மறுபுறத்தில், ஒருவேளை தேவன், காட்சிக்குரிய விஷயங்களில் தாம் இருப்பது போன்றே அசைவற்ற, அமைதியான விஷயங்களிலும் தாம் இருப்பதை எலியா அறிய வேண்டும் என்று விரும்பியிருக்கலாம். அது ஒரு யூகமாகவே இருக்கிறது. காற்று, பூமியதிர்ச்சி, அக்கினி மற்றும் மெல்லிய சப்தம் என்பது அவற்றின் *விளைவாக* இருக்கிறது என்பது மாத்திரமே நாம் உண்மையில் அறிகிற ஒரே விஷயமாக உள்ளது. எலியா குகையை விட்டு வெளியே வரவேண்டும் என்பதற்காகத் தேவன் இவை யாவற்றையும் செய்தார்.

“அதை [மெல்லிய சப்தத்தை] எலியா கேட்டபோது, தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு” (வசனம் 13அ). இதுதான், நாம் எலியாவின் சால்வையைப் பற்றி வாசிக்கும் முதல் வேளையாக உள்ளது, இது அவரது அலுவலின் அடையாளச் சின்னமாயிற்று (சகரியா 13:4ஐக் கவனிக்கவும்). அது ஒரு மயிர் ஆடையாக, ஒருவேளை செம்மறியாட்டுத் தோலினால் செய்யப்பட்டதாக இருந்தது. எலியா, “... வெளியே வந்து கெபியின் வாசலில் நின்றான்” (வசனம் 13ஆ). காற்று, பூமியதிர்ச்சி மற்றும் அக்கினி ஆகியவை எலியாவைக் குகையினுள் ஆழமாகப் போகும்படிச் செய்தியிருக்கலாம், ஆனால் மென்மையான சப்தமானது அவரை [குகையின்] வாசலுக்குக் கொண்டுவந்தது. எலியா முற்றிலும் வெளியே வந்திருக்கவில்லை, ஆனால் அவர் வளர்ச்சி நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்! மனச்சோர்வுள்ள மக்களிடத்தில் நாம் பணிசெய்கிறபோது, வளர்ச்சி நிலையானது ஒருவேளைக்கு ஒருசிறிது என்ற வகையிலேயே வருகிறது: மூன்று அடிகள் முன்னோக்கி வைத்து, இரண்டு அடிகள் பின்னோக்கிச் செல்லுதல்; சிலவேளைகளில், முன்னோக்கி இரண்டு அடிகளும் பின்னோக்கி மூன்று அடிகளும் செல்லுதலாகவும் இருக்கும்.

“அப்பொழுது, இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்கிற சத்தம் அவனுக்கு உண்டாயிற்று” (வசனம் 13இ). அது தேவன் முன்பு கேட்ட அதே கேள்வியாக உள்ளது. ஆஸ்திரேலியாவில் இடர்ப்பாடுள்ள குடும்பங்களில் ஊழியம் செய்யும் எனது நண்பர் ஒருவர் என்னிடத்தில், “மனச் சோர்வுடைய மக்களிடம் நீங்கள் தொடங்க வேண்டிய இடம் அதுதான்; நீங்கள் கேள்வி கேட்கவேண்டும்” என்று கூறினார். எலியா ஏன் அங்கிருந்தார் என்று தேவன் அறிந்திருந்தார், ஆனால் அவர் எலியாவை வெளியே கொண்டுவருதற்காக அவர் கேள்விகளைக் கேட்டார்.

எலியாவின் பதிலானது வார்த்தைக்கு வார்த்தை முன்பு போலவே இருந்ததைக் கவனியுங்கள்:

> அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத்

*தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்கள் இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள், நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான் (வசனம் 14).*

எலியா தமது மனதில் இந்தச் சிந்தனைகள் ஒரு வரிப்பள்ளம் போன்ற அடையாளத்தைக் கொண்டிருக்கும்வரையில் இவற்றைத் திரும்பத் திரும்பத் தமது மனதில் கொண்டிருந்தது எவ்வாறு என்று நம்மால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது; இப்போது அவரால் அந்தப் பள்ளத்தில் இருந்து வெளியேற முடியாதிருந்தது. நீங்கள் எப்போதாவது மனச்சோர்வு அடைந்திருந்தால், நீங்கள் பித்துப் பிடித்துப் போகும் வரையிலும் உங்கள் மனதில் மீண்டும் மீண்டும் ஒரேவிதமான எதிர்மறையான மற்றும் அழிவுக்குரிய சிந்தனைகளைத் திரும்பத் திரும்பச் சிந்திப்பது எவ்வாறு என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இது எலியாவைக் கண்டிப்பதற்கு - அல்லது அவரைத் திருத்துவதற்கு - கர்த்தருக்கு ஒரு நல்ல நேரமாக இருந்திருக்கும், ஆனால் கர்த்தர் என்ன செய்தார் என்று கவனியுங்கள்: “அப்பொழுது கர்த்தர் அவனைப் பார்த்து: நீ தமஸ்குவின் வழியாய் வனாந்திரத்திற்குத் திரும்பிபோய்” (வசனம் 15அ). “எலியா, குகையை விட்டு முற்றிலும் வெளியே வந்து, வடக்கு நோக்கிப் பயணப்படு.” தமஸ்குவின் வனாந்தரப் பகுதியானது கலிலேயாக் கடலில் இருந்து வடக்கில் முப்பது மைல்கள் தூரத்தில் இருந்தது.

*“நீ ... போய், ஆசகேலைச் சீரியாவின்மேல் [அல்லது ஆராமின்மேல்] ராஜாவாக அபிஷேகம்பண்ணி,[12] பின்பு நிம்சியின் குமாரனாகிய யெகூவை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணி [இவர் ஆகாபின் இடத்தை எடுத்துக்கொள்வார்], ஆபேல்மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரன் எலிசாவை உன் ஸ்தானத்தில் தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணு. சம்பவிப்பதாவது: ஆசகேலின் பட்டயத்திற்குத் [அது யுத்தத்தின் பட்டயமாக உள்ளது] தப்பினவனை யெகூ கொன்றுபோடுவான் [அது நீதியின் பட்டயமாக உள்ளது]; யெகூவின் பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்றுபோடுவான் [அது சத்தியத்தின் பட்டயமாக உள்ளது].[13] ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற [அதாவது, பாகாலின் உருவம் ஒன்றை முத்தம் செய்யாதிருக்கிற] வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார்” (வசனங்கள் 15ஆ-18).*

தேவன், எலியா கூறியிருந்த எதிர்மறையான விஷயம் ஒவ்வொன்றிற்கும் பதில் அளித்தார் என்பதைக் கவனியுங்கள்:

“இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்” என்று எலியா கூறியிருந்தார்; “சீரியாவின் இராஜாவான ஆசகேல் இஸ்ரவேலைத் தண்டிப்பான்” என்று தேவன் கூறினார். சீரியா நாடானது இஸ்ரவேலின் அண்டை நாடுகளிலேயே மிகவும் மோசமான விரோதியாக இருந்தது.

“[ஆகாபும் யேசபேலும்] உம்முடைய பலிபீடங்களை இடித்து, ... போட்டார்கள்,” என்று எலியா கூறியிருந்தார்; “ஆகாபின் அரசவம்சத்தை யெகூ

ஒழித்துப் போடுவான். அதன் பின்பு பாகாலை ஆராதித்தல் நடைபெறாது" என்று தேவன் கூறினார். தொடர்ந்து வரும் வசனங்களில் நாம், யெகூ ஆகாபின் குடும்பத்தை முற்றிலுமாகத் துடைத்துப் போடுகையில், நாம் யெகூவின் இரத்தப்பழியான வேலையை, யூத வரலாற்றில் இதற்கு இணையாக வேறு எதுவும் இல்லாத அழிவின் வேலையைப் பற்றி வாசிப்போம். யோசிப்பஸ் என்பவரும்கூட, யெகூ எவ்வாறு பாகாலின் கோவில்களுக்குள் சென்று, ஆராதிப்பவர்களின் இரத்தம் அங்கு செலுத்தப்பட்ட பலிகளின் இரத்தத்துடன் கலப்பதற்கு எவ்வாறு காரணமானான் என்று கூறுகிறார்.

"உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்" என்று எலியா கூறியிருந்தார்; "எலிசா என்ற பெயருடைய பதில் ஆள் ஒருவனை நான் தருவேன்" என்று தேவன் கூறினார்.

"நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்" என்று எலியா கூறியிருந்தார்; "பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்" என்று தேவன் கூறினார். தேவன், "எலியாவே, சூழ்நிலையானது நம்பிக்கையற்றதாக இருக்கவில்லை. எனது உதவியுடன் நீ ஒவ்வொரு பிரச்சனையைப் பற்றியும் செயல்பட்டு ஒவ்வொரு அறைகூவலையும் சந்திக்க முடியும்" என்று கூறினார். இது தேவனுடைய மனிதர் - மற்றும் தேவனுடைய மனுஷி - கற்றுக்கொள்ள வேண்டிய அத்தியாவசியமான பாடமாக உள்ளது.

"அப்படியே அவன் [எலியா] அவ்விடம் விட்டு புறப்பட்டுப்போய்" (வசனம் 19அ). கடைசியில் அவர் குகையை விட்டு வெளியேறினார்! அவர் தேவனுடைய பணியைச் செய்யப் புறப்பட்டார். அவர் மீண்டும் தடத்திற்கு வந்தார். அவர், "பன்னிரண்டு ஏர் பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் கண்டான்; அவன் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருந்தான்" (வசனம் 19ஆ).[14] எவரொருவரும் மூன்றரை ஆண்டுகள் அளவாகப் பயிரிட இயலாதிருந்தது; இது இஸ்ரவேலில் இருந்த விவசாயிகளுக்கு மன எழுச்சியான வேளையாக இருந்திருக்க வேண்டும்.

கீலேயாத்தில் இருந்து வந்த நயப்பாங்கற்ற வகையில் காணப்படும் தீர்க்கதரிசிக்கு, யோர்தான் பள்ளத்தாக்கில் இருந்து வந்த அழுக்கான விவசாயி என்பவரே தேவனுடைய பதிலியாக இருந்தார்! நீங்கள் யார் என்பது முக்கியமற்றது; கர்த்தருக்கு உங்கள் அர்ப்பணித்தலே முக்கியமானதாக உள்ளது. உங்கள் இருதயம் அவர்மீது நிலைத்திருந்தால், அவர் தமது ஊழியத்தில் உங்களைப் பயன்படுத்த முடியும்!

"எலியா அவன் இருக்கும் இடமட்டும் போய், அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்" (வசனம் 19ஆ) - இது எலியாவின் இடத்தை எடுத்துக்கொள்ளும்படி தேவன் எலிசாவைத் தேர்ந்தெடுத்தார் என்று அவர் அறிய அனுமதித்த அடையாளத்துவ வழியாகும்.

> அப்பொழுது அவன் [எலிசா] மாடுகளைவிட்டு, எலியாவின் பிறகே ஓடி: நான் என் தகப்பனையும் என் தாயையும் முத்தஞ்செய்ய உத்தரவு கொடும், அதற்குப்பின் உம்மைப் பின்தொடர்வேன் என்றான். அதற்கு அவன்: போய்த் திரும்பிவா; நான் உனக்குச் செய்ததை நினைத்துக்கொள் என்றான்.[15] அப்பொழுது அவன் இவனை விட்டு[த்தன் பெற்றோரிடத் திற்கு]ப்போய்,

[தான் உழுவதற்குப் பயன்படுத்திக் கொண்டிருந்த] ஓர் ஏர்மாடுகளைப் பிடுத்து அடித்து, [மரக்கலப்பை மற்றும் தோல்கடிவாளம் ஆகிய] ஏரின் மரமுட்டுகளால் அவைகளின் [பலிசெலுத்தப் பயன்படுத்தியிராத] இரைச்சியைச் சமைத்து [அதை பிரிவு உபசார விருந்தாக] ஜனங்களுக்குக் கொடுத்தான்; அவர்கள் சாப்பிட்ட[னர்] (வசனங்கள் 20, 21அ).

எலிசா தமது உறவுகளை முறித்துக்கொண்டிருந்தார். அவரது வாழ்வின் அந்தப்பகுதி முடிந்து விட்டது. "பிற்பாடு அவன் எழுந்து, எலியாவுக்குப் பின்சென்று அவனுக்கு ஊழியஞ்செய்தான்" (வசனம் 21ஆ). அவர் எலியாவின் தேவைகளைக் கவனித்தார். எலிசா, வேலைக்காரனின் பணியை நிகழ்த்தினார் என்பதை விவரிக்கும் வழியாக "எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்தார்" (2 இராஜாக்கள் 3:11).

எலியா மீண்டும் ஒருமுறை தமது முதன்மை ஆணையரின் - சித்தத்தைச் செய்ய - முன்னோக்கிச் சென்றார்.

எலியாவின் பிரச்சனைகள் என்ற விஷயத்தைக் குணமாக்கத் தேவன் கைக்கொண்ட வழியை நாம் தொகுத்துரைப்போமாக:

முதலாவதாக, தேவன் எலியாவின் மாம்சப்பிரகாரமான தேவைகளைப் பற்றி அக்கறை மேற்கொண்டார். அவர் அந்தத் தீர்க்கதரிசியை உண்ணவும், குடிக்கவும் மற்றும் இளைப்பாறவும் செய்தார். மனச்சோர்வுடன் இருக்கும் ஒருவருடன் நாம் பேசும்போது, எவ்வித மாறுபாடுமின்றி, அவர் உடல்ரீதியாகவும் உணர்வுரீதியாகவும் சக்திதீர்ந்தவராக இருக்கிறார். அவருக்குச் சிறிது ஓய்வு தேவைப்படுகிறது; அவருக்கு மென்மையான, அன்பான கவனித்தல் தேவைப்படுகிறது. மனச்சோர்வுடைய நபர் ஒருவரை முற்றிலுமான பரிசோதனைக்கு மருத்துவரிடம் அழைத்துச் செல்லுதல் என்பதே நான் செய்கிற முதல் விஷயமாக உள்ளது. நமது உடல்கள் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக உள்ளன என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும் (1 கொரிந்தியர் 3:16, 17). *இன்றைக்கான சத்தியம்* பத்திரிக்கைக்கு எழுதுவதற்காக நான் அர்க்கன்சாஸில் உள்ள சியார்சிக்கு குடியிருக்கச் சென்றபோது, அவ்வப்போது நிறுத்தி ரோஜாக்களின் மணத்தை முகர ஞாபகப்படுத்துவதற்காக நான் எனது எழுதும் அறையின் கதவின்மீது செயற்கையான மலர் ஒன்றை வைத்திருந்தேன்!

இரண்டாவதாக, எலியாவிடத்தில் தேவன் மென்மையாகச் செயல்பட்டார். நான் அறிந்துள்ள கிறிஸ்தவ ஆலோசகர்களில் பெரும்பான்மையானவர்கள், எலியா ஊக்கமிழந்துபோன வரலாற்றை நேசிக்கின்றனர். இந்த வரலாற்றில் இருந்து இருபத்தி ஐந்து கருத்துக்கள் கொண்ட ஒரு பட்டியல், "கேள்விகள் கேட்குதல்" என்பதில் தொடங்கி "அவர் தம்மிடத்தில் இருந்து தம் சிந்தையை தேவன்மீது வைத்தல்" என்பது வரையில் நவீன ஆலோசனை முறைமைகளை எடுத்துரைக்கின்றன. அவற்றை ஒன்றுகூட்டிக் குவிப்பதில் நாம், எலியாவிடத்தில் தேவன் *மென்மையாகச்* செயல்பட்டார் என்று கூற முடியும்.

இந்த ஒரு தவறுதலின் காரணமாகத் தேவன் இந்த ஊழியரை விட்டுக்கொடுத்துவிடவில்லை. அவரைத் தேவன் திட்டவில்லை அல்லது சிறுமைப்படுத்தவில்லை. மாறாக தேவன் அவரை பயன்நிறைந்த இடத்திற்குத் திரும்பவும் ஜாக்கிரதையாக வழிநடத்தினார். தேவன் அன்பின் தேவனாக இருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர் நமது பக்கம் இருக்கிறார் (ரோமர் 8:31). அவர்

நம்மை இரட்சிக்க விரும்புகிறார் (2 பேதுரு 3:9). நாம் புறம்பே செல்லும்போது, அவர் நம்மைத் திரும்பவும் கொண்டுவருவதற்குத் தம்மால் முடிந்த யாவற்றையும் மென்மை யாகச் செய்கிறார் (சங்கீதம் 23:3, 5; லூக்கா 15:4-6). நாம் மனந்திரும்பினால், அவர் விரித்த கரங்களுடன் நம்மை ஏற்றுக்கொள்கிறார் (லூக்கா 15:20ff.).

ஊக்கமிழந்து இருப்பவர்களிடம் *நாம்* செயல்படும்போது, அது பரிவிரக்கத்தடனும் மென்மையுடனும் இருக்கட்டும்.

மூன்றாவதாக, அவர் எலியாவுக்குச் செய்வதற்குப் பணியைக் கொடுத்தார். "அன்பில் சத்தியம்" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியை நான் அளித்துக்கொண்டிருந்தபோது, அதில் ஒரு நிகழ்ச்சியானது, ஆக்லஹாமா கிறிஸ்தவப் பல்கலைக் கழகத்தில் இருந்த பேராசிரியரான, முகவர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் பேசிய "சந்தேகத்தைக் கையாள்வது எவ்வாறு" என்ற உரையைச் சித்தரித்தது. அவர் நடைமுறை ஆலோசனைகள் பலவற்றை அளித்தார். "போய் ஊழியம் செய்யுங்கள்! உங்களை விட்டு வெளியேறுங்கள். உங்களைப் பற்றிச் சிந்திப்பதை நிறுத்துங்கள். மற்றவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள்; மற்ற வர்களுக்கு உதவ முயற்சி செய்யுங்கள்" என்பதே பெரும்பான்மையான தனிநபர்களுக்குத் தேவையான மிகமுக்கியமான அறிவுரையாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

எலியாவின் வாழ்வு முடிந்துவிடவில்லை என்று அவரிடத்தில் தேவன் கூறினார்: "செய்வதற்கு அர்த்தம் நிறைந்த பணியை நீ இன்னமும் கொண்டிருக்கிறாய். அது ஒரேவிதமான பணியாக இராது. (காலம் செல்கிறபோது நமது பணி மாறுகிறது; நமது திறமைகள் மாறுகின்றன.) இருப்பினும், அது முக்கியமான பணியாக இருக்கும். கர்மேல் மலையின்மீது இன்னொரு காட்சி இராது, ஆனால் செயல்கள் நிறைந்த, துடிப்புள்ள கணங்கள் இன்னமும் இருக்கும். நீ ஆகாபின் மனச்சாட்சிக்குப் பணிபுரிவாய். வானத்தி லிருந்து இன்னும் அதிகமான அக்கினி இறங்கும்." நாம் காணப்போகிறபடி, இளம் தீர்க்கதரிசிகளைப் பயிற்றுவிக்கும் முக்கியமான பணியில் எலியாவை ஈடுபடுத்தவும் தேவன் திட்டமிட்டார்! செயல்விளைவில் தேவன், "இந்தத் தவறினால் நான் உன்னை அலமாரியில் கிடக்க விடமாட்டேன். நீ இன்னமும் ஒரு மதிப்புள்ள ஊழியக்காரனாக இருக்கிறாய்!" என்று கூறினார்.

நம்மை நாம் குப்பைக்குவியலில் இருக்கக் கண்டால், செய்வதற்குச் சிலவற்றைக் கண்டறிதல், விசேஷமாக இன்னொருவரின் வாழ்வை ஆசீர்வதிக்கச் செய்வதற்குச் சிலவற்றைக் கண்டறிதல் என்பது அந்தக் குப்பைக்குவியலில் இருந்து நாம் வெளியேறுவதற்கான வழியாக இருக்கலாம். மற்றவர்களின் உணர்வுப்பூர்வமான பிரச்சனைகளுக்கு உதவ நீங்கள் முயற்சி செய்துகொண்டிருந்தால், அவர்கள் தங்கள் வாழ்வின் நோக்கத்தைக் கண்டறிய அவர்களுக்கு நீங்கள் உதவுங்கள்.

நான்காவதாக, தேவன் எலியாவுக்கு ஒரு நண்பரையும் துணையாளியையும் கொடுத்தார். ஒவ்வொருவருக்கும் யாராவது ஒருவர் தேவை. நம்மில் பலருக்கு, அவர் ஒரு அன்பான ஒரு கிறிஸ்தவத் துணையாக இருக்கிறார். மற்றவர்களுக்கு அவர் ஒரு நெருக்கமான கிறிஸ்தவ நண்பராக இருக்கிறார். நாம் யாவரும் இயேசுவை நண்பராகக் கொண்டிருக்கிறோம். நம் யாவருக்கும் யாரோ ஒருவர் தேவைப்படுகிறார். தேவன் எலியாவுக்கு எலிசாவைக் கொடுத்தார்.

ஒருவர், "நான் சபையின் ஊழியத்தில் ஈடுபட முயற்சி செய்தி

ருக்கிறேன். அங்கு பல தனிக்குழுக்கள் உள்ளன. அந்தக் குழுக்களில் எதிலும் என்னால் சேர இயலவில்லை'' என்று கூறலாம், நீங்கள் ஆராதிக்கும் இடத்தில் இதுபோன்றிருந்தால், நான் வருத்தப்படுகிறேன்; ஆனால் நீங்கள் ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொள்ள முடியும். சூரைச்செடியின்கீழ் இருக்கும் யாரையாவது கண்டறியுங்கள். உங்களைக்காட்டிலும் அதிகம் தனிமையில் இருக்கும் யாரையாவது கண்டறியுங்கள். ஒரு நண்பராக இருங்கள். உங்கள் புதிய நண்பரையும் உங்களையும் ஆசீர்வதிக்கும் ஆதரவுமுறைமை ஒன்றைக் கட்டியெழுப்பும் உங்கள் சொந்த வழியில் நீங்கள் இருப்பீர்கள்.

## முடிவுரை

கர்மேல் மலை என்ற வெற்றியின் மலையின்மீதல்ல, ஆனால் தனிமையின் மலையாகிய சீனாய் மலையின்மீதுதான் - நாம் நினைத்தபடியாக விஷயங்கள் நடக்காதபோது, நாம் நம்பியிருந்தபடியாக விஷயங்கள் நடக்காதபோதுதான் - நாம் எவற்றைக் கொண்டுள்ளோம் என்பதை நாம் கண்டறிகிறோம்.

நம்மை நாம் அங்கிருக்கக் கண்டால், நாம் முதலில் கர்த்தருடன் நமக்குள்ள உறவைப் பரிசோதனை செய்வது அவசியமாக உள்ளது. ஒருவேளை நாம், எலியாவைப் போல் "கர்த்தருடைய வார்த்தைக்காகக்" காத்திருப்பதற்குப் பதிலாக நாம் இருக்க விரும்பும் திசையில் ஓட்டத்தை மேற்கொண்டிருப்போம். ஒருவேளை நாம், வசனம் என்னவாக உள்ளது என்று கண்டறிய நமது வேதாகமங்களை வாசித்து, பின்பு அவரிடமாய்த் திரும்புதல் அவசியமாக இருக்கலாம்.

இன்று நீங்கள் எங்கிருக்கிறீர்கள்? நீங்கள் உங்களைச் சுய பச்சாதாபம் என்ற குகையில் இருக்கக் கண்டால் கர்த்தரிடமாய்த் திரும்பி அவர்மீது நம்பிக்கை வையுங்கள! அந்தக் குகையைவிட்டு வெளியே வாருங்கள்! சீனாய் மலையைவிட்டுப் புறப்பட்டு கல்வாரி மலைக்கு வாருங்கள்.

---

குறிப்புகள்

[1]"அவன் அஞ்சி" என்பது "அவன் கண்டு" என்ற எபிரெய மொழியின் அதே மெய்யெழுத்துக்களைப் பயன்படுத்துகிறது (KJV மற்றும் சில பதிப்புகளைக் காணவும்); உயிரெழுத்துக்கள் மாத்திரம் மாற்றப்பட்டுள்ளன. பெரும்பான்மையான நவீன மொழிபெயர்ப்புகள், "அவன் அஞ்சினான்" என்றுள்ள செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் இருந்து தங்களின் குறிப்பை எடுத்துக்கொண்டுள்ளன. [2]முந்திய பாடத்தின் குறிப்புகளில் காணவும். [3]ஒருவேளை அந்த வேலைக்காரன் விரைவாக ஓடக்கூடாதிருந்ததால் அவனை அவர் அங்கே விட்டு விட்டுச் சென்றிருக்கலாம்; ஒருவேளை அந்த வேலைக்காரனின் சொந்தப் பாதுகாப்பிற்காக அவனை அவர் அங்கே விட்டுச் சென்றிருக்கலாம். ஏன் என்பதைத் தேவன் நமக்குக் கூறவில்லை என்பதால், யூகம் செய்தல் என்பது பயனற்றதாக உள்ளது. [4]விருப்பத்தேர்வு: இவ்விடத்தில் ஒரு கைக்குட்டையைப் பயன்படுத்துங்கள். "காட்சி உதவிக் குறிப்புகள்'' பகுதியில் காணவும். [5]இந்த வேளையில் எலியாவின் ஜெபத்தை அவர் கர்மேல் மலையில் ஜெபித்த ஜெபத்துடன் நேரெதிராக ஒப்பிடவும்: 1 இராஜாக்கள் 18:36, 37. [6]மத்தேயு 10:28. [7]விருப்பத்தேர்வு: உங்கள் மார்பின்மீது கைவைத்து, இருதயத்தின் துடிப்பை வெளிக்கொண்டு வாருங்கள். இதை மைக்கின் அருகில் நின்றுகொண்டு செய்யுங்கள். [8]இவ்விடத்தில் உள்ள எபிரெய வார்த்தை "கற்கள்" அல்லது "[எரியும்] கரிகள்" என்று அர்த்தப்படக் கூடும் (KJV மற்றும் பிற மொழிபெயர்ப்புகளில்

*காணவும்). சூரைச் செடியின் வேர்கள் கரிசெய்யப் பயன்படுத்தப்படுகின்றன. [9]பெயர்செபாவில் இருந்து சீனாய் மலை இருப்பதாகக் கூறும் பாரம்பரிய இடம் 150 மைல்களே இருந்தது, இதற்கு நாற்பது நாட்கள் பயணக்காலம் ஆகாது, எனவே சீனாய் மலை நிகழ்வு முழுவதும் (அங்கு சென்ற பயணம், அங்கு செலவழிக்கப்பட்ட காலம் மற்றும் திரும்புகைப் பயணம்) ஆகிய முழுவதற்கும் நாற்பது நாட்கள் ஆகியிருக்கலாம். சீனாய் மலை என்பது உண்மையில் வேறொரு இடத்தில் இருந்தது என்ற இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது; 1 இராஜாக்கள் பற்றிய பர்ட்டன் காஃப்மென் என்பவரின் விளக்கவுரையைக் காணவும். [10]மூலவசனத்தில் "கெபி" என்றுள்ளது, இது மோசே தேவனைக் கண்ட மலையாகும் என்றும், ஒருவேளை எலியா வேண்டுமென்றே இந்தப் பரிசுத்த இடத்திற் குச் சென்றிருக்கலாம் என்றும் சிலர் நம்பக்காரணமாக உள்ளது. இருப்பினும், அது ஒரு மலைச்சிகரமாக இருக்கையில், இது எலியா தங்கி இருக்கக்கூடிய ஒரு குகையாக இருந்தது.*

*[11]விருப்பத்தேர்வு: மீண்டும் இவ்விடத்தில் ஒரு கைக்குட்டையைப் பயன்படுத்துங்கள். "காட்சி உதவிக் குறிப்புகளை" காணவும். [12]"அபிஷேகம் செய்தல்" என்பது 15 மற்றும் 16ம் வசனங்களில் அனேகமாக ஒரு அடையாளத்துவக் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம். இவர்களில் எவர்மீதாவது எலியாவே அல்லது எலிசாவோகூட நேரடியாக எண்ணெய் ஊற்றினார்கள் என்பதற்கான குறிப்பு எதுவும் இல்லை. எலியா தேவனுடைய பிரதிநிதியாகப் பணிசெய்தார் என்பதன் மீதான வலியுறுத்தமானது அவரைத் தேவனுடைய நோக்கங்களில் திரும்பவும் இட்டது. [13]எபேசியர் 6:17; எபிரெயர் 3:12. எலிசா, தேவபக்தியற்றவர்கள்மீது நியாயத்தீர்ப்புகளைக் கொண்டுவந்த கர்த்தருடைய வார்த்தையினால், அநீதியானவர்களை "மரணம்" அடையச் செய்தார். [14]ஒருவேளை இது, எலிசாவின் குடும்பம், இருபத்து நான்கு காளைகளைச் சொந்த மாகக் கொண்டிருக்கும் அளவுக்குச் செல்வமிக்கதாக இருந்தது என்பதை நிருபிப்பதாக இருக்கலாம்; ஒருவேளை இது அவ்வாறு நிரூபிக்காமலும் இருக்கலாம். ஒருவேளை அந்தப் பகுதியில் இருந்த விவசாயிகள் ஒன்றுகூடி ஒரு மனிதரின் வயலில் ஒருசமயமும் பின்பு இன்னொரு மனிதரின் வயலில் இன்னொரு சமயமும் வேலைசெய்திருக்கச் சாத்தியக்கூறு உண்டு. [15]இது அனேக மாக ஒரு கடிந்துகொள்ளுதலாக இருப்பதில்லை. எலியாவின் வார்த்தைகள், லூக்கா 9:57-62ல் சீஷர்களாக இருந்தவர்கள் கொடுத்த சாக்குப்போக்குபோல் இருந்தன என்பதற்கான குறிப்புகள் எதுவுமில்லை. அந்தத் தனிநபர்கள் இயேசுவைப் பின்பற்றுதலை முடிவற்ற வகையில் தள்ளிப்போட விரும்பினர் என்பது தெளிவு. எலிசா தனது பெற்றோர்களுக்கு பிரிவு உபசார முத்தம் கொடுத்தலைத் தவிர வேறு எதையும் விரும்பினார் என்பதற்கான குறிப்பு எதுவும் இல்லை. பின்தொடரும் வார்த்தைகள், எலியா "போய் உன் பெற்றோருக்குப் பிரிவு சொல்லிவிட்டு வா. உனக்குப் பணியை அளிக்கவே நான் எல்லா வற்றையும் செய்தேன். நீ உன் குடும்பத்துடன் உள்ள எல்லாப் பிணைப்புகளையும் துண்டிக்கவேண்டும் என்று நான் உனக்குக் கூறவில்லை" என்று சொன்னதாகவே சுட்டிக்காண்பிக்கின்றன. [16]இந்தக் கருத்தைத் தோற்றுவித்தது யார் என்று எனக்குத் தெரியவில்லை. பல ஆண்டுகளுக்கு முன் நான், ஆக்லஹாமா கிறிஸ்தவ விரிவுரைகள் என்ற கூட்டத்தில், பிரென்ட்டிஸ் மெடோர் என்பவர் "எலியா ஊக்கம் இழந்தபோது" என்ற தலைப்பில் நிபுணத்துவம் வாய்ந்த ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கித்ததைக் கேட்டேன். அந்த வேளை முதற்கொண்டு நான், பல பிரசங்கியார்களும் ஆலோசகர்களும் இந்த வரலாற்றை, ஊக்கமிழத்தல் மற்றும் சோர்ந்துபோகுதல் என்பதைக் கையாள்வதற்கு மாதிரியாகப் பயன்படுத்துவதைக் கேள்விப்பட்டிருக்கிறேன்.*

## காட்சி - உதவி குறிப்புகள்

ஒரு வெள்ளைக் கைக்குட்டையை உங்கள் பேன்ட் பாக்கெட்டில் வைத்திருங்கள். எலியா தம்மைக் குறித்து வருந்திய உணர்வை நீங்கள் கூறுகையில், அந்தக் கைக்குட்டையை வெளியே எடுத்து அதைக் கொண்டு உங்கள் கண்களைத் துடைத்துக் கொள்ளுங்கள். எலியா விட்டுக்கொடுத்து விடுதல் பற்றி நீங்கள் கூறும்போது, அதை ஒரு வெள்ளைக் கொடியைப் போன்று ஆட்டுங்கள். பாடத்தின் எஞ்சியுள்ள பகுதியில், அதை ஒரு வெள்ளைக் கொடியைப் போன்று கண்களில் படும்படி வையுங்கள். பாடத்தின் முடிவில், எலியா தமது வாழ்வைத் திரும்பவும் தடத்தில் பெறும்போது, கைக்குட்டையை உங்கள் சட்டைப் பையில் தன்னம்பிக்கையுடன் வையுங்கள். உங்கள் சுய பச்சாதாபம் முடிந்துபோயிற்று, நீங்கள் "தேவனுடன் செல்வதற்கு" தயாராக இருக்கிறீர்கள்.

## பாட வரைகுறிப்பு

*அறிமுகம்*

A. *எலியா, மழைக்கான தமது ஜெபத்திற்குப் பதில் அளிக்கப்பட்டபின்பு, மிகவும் மன எழுச்சியுள்ளவரானார்! 19ம் அதிகாரத்தில் நாம் காணும் வேறுபாடுதான் என்ன!*
   1. *எலியா நம்மைப்போலவே பாடுள்ள மனிதராக இருந்தார் (யாக்கோபு 5:17; ஒருவேளை யாக்கோபு, 1 இராஜாக்கள் 19ஐப் பற்றி நினைத்திருக்கலாம்).*
   2. *எலியா நம்மைப் போலவே ஊக்கம் இழந்துபோனார். மற்றும் அவர் ஒருவர் மாத்திரமே அவ்வாறு செய்த தேவனுடைய மனிதராக இருக்கவில்லை:*
      a. *மோசே (எண்ணாகமம் 11)*
      b. *யோனா (யோனா 4)*
      c. *பவுல் (2 கொரிந்தியர் 1)*

B. *நாம் எலியாவின் பிரச்சனையை, அவர் எவ்வாறு அப்படியானார், மற்றும் அந்தப் பிரச்சனையைக் குறித்துத் தேவன் எவ்வாறு கவனம் எடுத்தார் என்று பார்ப்போம் (1 இராஜாக்கள் 19).*[16]

I. *பிரச்சனையின் விஷயம் (19:1-4)*

A. *எலியா நாட்டிற்கான மாபெரும் நம்பிக்கையுடன் நகரத்தின் ஒலிமுக வாசலில் பிரவேசித்தார்.*
   1. *எலியா எவையெல்லாம் நடக்கும் என்று நம்பியிருந்தாரோ, அவை எதுவும் நடக்கவில்லை (வசனம் 1). யேசபேல் மூர்க்கவெறி கொண்டவளாக இருந்தாள்!*
   2. *யேசபேல் ஒரு கொலைகாரனை அனுப்புவதற்குப் பதிலாக ஒரு செய்தியாளனை அனுப்பியது ஏன் (வசனம் 2)? அவள் அனேகமாக எலியாவிடம் ஒற்றைக்கு ஒற்றை மோதும்படி அறைகூவல் விடுத்திருக்கலாம்.*
   3. *பாகாலின் தீர்க்கதரிசிகள் 450 பேருக்கு எதிராக நின்றிருந்த மனிதர் அரசியிடத்தில் இருந்து* ஓடுகிறார் *(வசனம் 3).*

4. *அவர் ஒரு சூரைச் செடியின்கீழ் ஒட்டத்தை நிறுத்துகிறார் (வசனம் 4). இங்கு நாம் ஊக்கமிழத்தலின் தலைசிறந்த வார்த்தைகளைக் கொண்டிருக்கிறோம்.*

B. *எலியா சூரைச்செடியின்கீழ் எவ்வாறு வந்து சேர்ந்தார்?*

1. *அவர் தெய்வீக வெளிப்பாட்டினால் அல்ல, ஆனால் மனித முகாந்தரத்தினால் வழி நடத்தப்பட்டார். இம்முறை அவர் "கர்த்தருடைய வார்த்தைக்காக" காத்திருக்கவில்லை.*
2. *அவரது சிந்திக்கும் செயல்முறை தவறானதாக இருந்தது.*
3. *அவர் பயத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுத்திருந்தார். நாம் பயத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது அது பலுகிப்பெருகுகிறது.*
4. *அவர் வெற்றிக்குப் பின்வரக்கூடிய கீழாக்குதலுக்குத் தயாரற்ற நிலையில் இருந்தார். வெற்றியானது நம்மை ஊறுபடக்கூடியவர்கள் ஆக்க முடியும்.*
5. *அவர் தமது பலத்தின் ஆதாரமூலங்கள் எல்லாவற்றிலும் இருந்து தம்மைத் துண்டித்துக் கொண்டிருந்தார்.*
    a. *அவர் தேவனுடைய வசனத்திற்காகக் காத்திருக்க வில்லை.*
    b. *அவர் தமது வேலைக்காரனிடத்தில் பிரிவுசொல்லிக் கொண்டார்.*
6. *அவர் தாமே சக்திதீர்ந்து போனவராக ஆக அனுமதித்தார். (நீங்கள் மிகவும் களைப்பாக இருக்கும்போது முக்கியமான முடிவு ஒன்றை ஒருபோதும் ஏற்படுத்தாதீர்கள்!)*
7. *அவர் சுய பச்சாதாபத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுத்தி ருந்தார். சுய பச்சாதாபம் பொய்களைக் கூறுகிறது, பின்பு அவற்றைப் பெரியதாக்குகிறது, பின்பு நாம் அவற்றை நம்பும்படி செய்கிறது. சுய பச்சாதாபம் என்பது ஒரு தனிநபரைத் தற்கொலை செய்துகொள்ளும் நிலைவரையிலும் கொண்டுவரக்கூடும்.*

II. *பிரச்சனையின் இந்த விஷயத்தைக் குணமாக்குவதற்குத் தேவன் என்ன செய்தார் (19:5-21)*

A. *தேவன், எலியாவின் உடல்ரீதியான தேவைகளைப்பற்றி அக்கறை எடுத்துக்கொண்டார்: ஒய்வு மற்றும் உணவு (வசனங்கள் 5-8).*

B. *தேவன், எலியாவின் பிரச்சனைகளில் இருந்து அவரது கவனத்தைத் தம்மை நோக்கித் திருப்புகையில், எலியாவை மென்மையாகக் கையாண்டார் (வசனங்கள் 9-14).*

1. *தேவன் எலியாவைத் தம்மை நோக்கி இழுப்பதற்கு முதலில் கேள்விகளைப் பயன்படுத்தினார்.*
2. *பின்பு அவர், எலியாவைக் குகையிலிருந்து வெளியே வரவழைப்பதற்குச் சப்தங்களைப் பயன்படுத்தினார்.*

C. *எலியா செய்வதற்கு அர்த்தம் நிறைந்த பணிகளைத் தேவன் அவருக்குக் கொடுத்தார் (வசனங்கள் 15-18).*

1. *எலியா முன்பு கூறியிருந்த எல்லாவற்றிற்கும் தேவன் பதில்*

அளித்தார் என்பதைக் கவனியுங்கள்.

a. எலியா: ''உமது உடன்படிக்கையை இஸ்ரவேல் கைவிட்டுவிட்டது''; தேவன்: "சீரியாவின் இராஜாவான ஆசகேல் இஸ்ரவேலைத் தண்டிப்பான்."

b. எலியா: ''ஆகாபும் யேசபேலும் உமது பலிபீடத்தை இடித்துத் தரை மட்டும் ஆக்கியுள்ளனர்''; தேவன்: ''ஆகாபின் அரசபரம்பரையை யெகூ அழிப்பான். அதன்பின்பு பாகாலை ஆராதிக்கும் ஆராதனை இராது."

c. எலியா: "அவர்கள் உமது தீர்க்கதரிசிகளைக் கொலை செய்துள்ளனர்''; தேவன்: ''நான் ஒரு பதிலியை [எலிசாவை] அளிப்பேன்."

d. எலியா: "நான் ஒருவன் மாத்திரமே மீதியாயிருக்கிறேன்"; தேவன்: "பாகாலுக்கு முடங்காதிருக்கிற ஏழாயிரம்பேர் உள்ளனர்."

2. எலியாவின் வாழ்வு முடிந்துவிடவில்லை, அவர் அர்த்தம் நிறைந்த பணியைக் கொண்டிருந்தார் என்று அவரிடத்தில் தேவன் கூறிக்கொண்டிருந்தார்.

a. "கர்மேல் மலையில் இன்னொரு காட்சி இராதிருக்கலாம், ஆனால் செயல்கள் நிறைந்த, துடிப்புள்ள கணங்கள் இன்னமும் இருக்கும்."

b. இளம் மனிதர்களைப் பயிற்றுவிக்கும் முக்கியமான பணியையும் தேவன் அவருக்கென்று திட்டமிட்டு வைத்திருந்தார்!

D. தேவன் எலியாவுக்கு ஒரு நண்பர் மற்றும் துணையாளரைக் கொடுத்தார் (வசனங்கள் 19-21).

1. எலியா இருளான குகையில் இருந்து வெளியேறி தேவனுடைய ஆணையைச் செய்வதற்குச் சென்றார். அவர் "தடத்தில் இருந்து வெளியே குதித்து" இருந்தார்; ஆனால் அவரைத் தேவன் திரும்பவும் தடத்தில் வைத்தார்!

2. எலியா எலிசாவைக் கண்டுபிடித்தார். எலியா நயப்பாங்கற்ற மனிதராக இருந்தார்; எலிசா விவசாயியாக இருந்தார். தனிநபர்கள் தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்து இருந்தால், தேவன் பல்வகைப்பட்ட ஆளுமைத்தன்மைகளையும் பல்வகைப்பட்ட திறமைகளையும் தமக்கென்று பயன்படுத்திக்கொள்ள முடியும்!

3. எலிசா எலியாவைப் பின்பற்றி, ''அவருக்கு ஊழியம் செய்தார்" (வசனம் 21). எலியாவுக்குத் தேவைப்பட்டவற்றை எலிசா அளித்தார். நம் யாவருக்கும் நண்பர்கள் தேவைப்படுகின்றனர்!

முடிவுரை

A. கர்மேல் மலை என்ற வெற்றியின் மலையின்மீதல்ல, ஆனால் தனிமையின் மலையாகிய சீனாய் மலையின்மீதுதான் -

நாம் நினைத்தபடியாக விஷயங்கள் நடக்காதபோது, நாம் நம்பியிருந்தபடியாக விஷயங்கள் நடக்காதபோதுதான் - நாம் எவற்றைக் கொண்டுள்ளோம் என்பதை நாம் கண்டறிகிறோம்.

B. நீங்கள் உங்களை, சுயபச்சாதாபம் என்ற இருளான குகையில் இருக்கிறவர்களாகக் கண்டறியும்போது, கர்த்தரிடமாய்த் திரும்பி அவரில் நம்பிக்கை வையுங்கள்! அந்தக் குகையை விட்டு வெளியேறுங்கள்!

